# பெற்றோர் மற்றும் மாணவர்களுக்கான தகவல்

**எங்கள் பள்ளி எதிர்வரும் ஆண்டில் ஆரோக்கியமான இளைஞர்கள் கருத்துக்கணிப்பில் (ஹெல்தி யூத் சர்வே) பங்கேற்கும்.**

இந்த கருத்துக்கணிப்பில், காயம், சுகாதார விளைவுகள் மற்றும் ஆல்கஹால் மற்றும் போதைப்பொருள் பயன்பாடு ஆகியவற்றால் ஏற்படும் அபாயங்கள் பற்றிய கேள்விகள் கேட்கப்படும். எங்கள் இளைஞர்களுக்கான ஆதரவை வழங்குவதற்கும் அவர்களுக்கு விளையக்கூடிய ஆபத்துக்களைக் குறைப்பதற்கும், பள்ளிகள் மற்றும் மாநில மற்றும் உள்ளூர் முகமைகள் இந்தக் கருத்துக்கணிப்பு முடிவுகளைப் பயன்படுத்தும். இந்த ஆரோக்கியமான இளைஞர்கள் கருத்துக்கணிப்பு தன்னார்வமானது மற்றும் அடையாளப்படுத்த முடியாதது மேலும் நமது இளைஞர்களுக்கு சேவைகள் வழங்குவதற்கான கொள்கை மற்றும் திட்டங்களுக்கு வழிகாட்ட முக்கியமான தகவல்களை வழங்குகிறது.

---

இந்த தகவலை உங்கள் மாணவருடன் பகிர்ந்து கொள்ளவும்.
அதன் பிறகு இந்த கருத்துக்கணிப்பு பற்றி மாணவருடன் பேசி, அவரின் பங்கேற்பு குறித்து முடிவு செய்யவும்.

---

**கேள்வி: இந்த கருத்துக்கணிப்பில் கலந்து கொள்ள யாரெல்லாம் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்?**

**பதில்:** வாஷிங்டன் மாநிலம் முழுவதுமுள்ள 6,8,10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் மற்றும் அளவில் சிறிய பள்ளி மாவட்டங்களிலுள்ள 7,9, மற்றும் 11 ஆம் வகுப்பு மாணவர்கள்.

**கேள்வி: இந்த கருத்துக்கணிப்பு தன்னார்வமானதா?**

**பதில்:** ஆம்! இந்த கருத்துக்கணிப்பில் கலந்து கொள்ளும் மாணவர்கள் கேள்விகளைத் தவிர்க்கலாம் மற்றும் எந்த ஒரு நேரத்திலும் கருத்துக்கணிப்பில் கலந்து கொள்வதிலிருந்து விலகிக் கொள்ளலாம். இந்த கருத்துக்கணிப்பில் உங்கள் மாணவர் கலந்து கொள்வதை நீங்கள் விரும்பவில்லை என்றால், நீங்கள் பள்ளியைத் தொடர்பு கொண்டு உங்கள் மாணவருக்கு விலக்கு அளிக்க கோரலாம். இந்த கருத்துக்கணிப்பில் கலந்து கொள்ள விரும்பாத மாணவர்களும் அது குறித்து தங்கள் ஆசிரியர்களிடம் தெரிவிக்கலாம். இந்த கருத்துக்கணிப்பில் பங்கேற்காத மாணவர்கள், பாடங்களைக் கற்பது அல்லது நூலகத்தில் புத்தகங்கள் வாசிப்பது போன்ற வேறு நடவடிக்கைகளில் பங்குபெறுவார்கள் இந்த கருத்துக்கணிப்பில் கலந்து கொள்ளாமல் இருந்தாலும் எந்த ஒரு தண்டத்தொகையும் விதிக்கப்படாது. மற்றும் உங்கள் மாணவர்களின் மதிப்பெண்கள் பாதிக்கப்படாது.

**கேள்வி: கருத்துக்கணிப்பில் என்னென்ன கேள்விகள் அடங்கியிருக்கும்?**

**பதில்:** நாடு முழுவதும் மற்றும் வாஷிங்டனிலும் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்புகளில் இருந்து கேள்விகள் கேட்கப்படும். பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர்கள், கேள்வித் தொகுப்பின் ஒரு நகலைக் காண அல்லது www.askhys.net. என்ற இணைய தளத்தில் கேள்விகளை மதிப்பாய்வு செய்ய தங்கள் பள்ளி அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம்

பின்வரும் சில தலைப்புகள் அதில் அடங்கும்:

- வயது, பாலினம், இனம், நாட்டினம் போன்ற தகவல்கள்
- பள்ளி மற்றும் சமூகம் குறித்த உணர்வுகள்
- பெற்றோர், நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டார் ஆகியோருடனான உறவு
- உணவுப் பழக்கவழக்கங்கள், உடற்பயிற்சி நடவடிக்கைகள்
- ஆரோக்கியம் குறித்த கல்வி
- புகையிலை, ஆல்கஹால், மற்றும் இதர போதை மருந்துகளின் பயன்பாடு குறித்த மனப்பாங்கு
- பாதுகாப்பு தொடர்பான நடத்தை மற்றும் உணர்வுகள்
- வன்முறை தொடர்பான நடத்தைகள்
- பாலின அடையாளம் (விருப்பத்தேர்வின் அடிப்படையில் மற்றும் 6 மற்றும் 7* வகுப்பு மாணவர்களுக்கான எளிதாக்கப்பட்ட பதிப்பு)
- பாலின ஈர்ப்பு (6 மற்றும் 7 ஆம் வகுப்பு மாணவர்களுக்கானது அல்ல)
- பாலின நடத்தை, பலாத்காரம், சுரண்டல் (6 மற்றும் 7 ஆம் வகுப்பு மாணவர்களுக்கானது அல்ல)

*பள்ளிகள் இந்த கேள்வியைக் குறிப்பிட்டு கேட்க விரும்பவில்லை என்றால், மாணவர்கள் தங்கள் பாலின அடையாளத்தைத் தெரிவிக்கும்படி கேட்கப்படமாட்டார்கள்.

**கேள்வி: மாணவர்களின் தனிப்பட்ட அடையாளம் எவ்வாறு பாதுகாக்கப்படுகிறது?**

பதில்: கருத்துக்கணிப்பில் மாணவர்கள் தங்களின் பெயர்களை வழங்கமாட்டார்கள். ஒரு மாணவரை அடையாளம் காட்டக்கூடிய எந்த ஒரு குறியீடோ அல்லது தகவலோ இதில் இருக்காது. அவர்கள் அளிக்கும் பதில்களை பள்ளியைச் சேர்ந்த யாராலும் பார்க்க முடியாது. கருத்துக்கணிப்பை நிறைவு செய்த பிறகு மாணவர்கள் அதை இரகசியமாக சமர்ப்பிப்பார்கள். கருத்துக்கணிப்பின் முடிவுகள் எந்த ஒரு மாணவரையும் அடையாளப்படுத்தாது.

மாணவர்களின் பதில்கள் அங்கீகரிக்கப்படாத நபரால் அணுகப்பட்டிருந்தால், பள்ளி, வகுப்பு மற்றும் இனம் போன்ற தகவல்களைப் பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட மாணவரை யாரோ ஒருவர் அடையாளம் காண முயற்சிக்கிறார் என்பதை அது குறிக்கும். எவ்வாறாயினும் இரகசிய தன்மையைக் காப்பதற்கு நாங்கள் தீவிரமாக முயற்சிக்கிறோம் மேலும் அங்கீகரிக்கப்படாத நபர்கள் மாணவர்களின் பதில்களை அணுகுவது மற்றும் இந்த கருத்துக்கணிப்பில் சேகரிக்கப்படும் பதில்கள் அடையாளம் காணப்படாமல் இருப்பதற்கு பல்வேறு வழிமுறைகளைக் கடைப்பிடிக்கிறோம். மேலும் அறிய: https://www.AskHYS.net/HYS/HYSInformation

**கேள்வி:** கருத்துக்கணிப்பின் முடிவுகள் எவ்வாறு பயன்படுத்தப்படும்?

**பதில்:** பள்ளிகள், பள்ளி மாவட்டங்கள், கவுண்டிகள் மற்றும் மாநில முகமைகள், நமது மாணவர்களைப் புரிந்து கொள்ள மற்றும் அவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்கும் பொருட்டு இந்த முடிவுகளைப் பயன்படுத்துவார்கள். இந்த முடிவுகள், திட்டமிடுவதற்கு, மதிப்பீடு செய்வதற்கு மற்றும் செயல்திட்டங்களை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் மற்றும் அதற்கு ஆதரவு அளிக்க நிதி திரட்டல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ளவும் பயன்படுத்தப்படும். அடையாளப்படுத்தாத தரவுகள் உள்ளூர் சுகாதாரத் துறை, பழங்குடியினர் தொற்றுநோயியல் மையங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சியாளர்களுடனும் பகிர்ந்து கொள்ளப்படும்.

**மேலும் அதிக தகவல் தேவையா?**

இந்த கருத்துக்கணிப்பின் நோக்கம் அல்லது இந்த கருத்துக்கணிப்பின் நடைமுறைகள் குறித்து உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருக்குமானால்:

- 1-877-HYS-7111 என்ற இலவச அழைப்பு எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள்
- மின்னஞ்சல் முகவரி healthy.youth@doh.wa.gov

ஆரோக்கியமான இளைஞர்கள் கருத்துக்கணிப்பு குறித்த தகவல்கள் கிடைக்கும் இணையதளம்: www.AskHYS.net

இந்தக் கடிதத்தில் விவரிக்கப்பட்ட ஆரோக்கியமான இளைஞர்கள் கருத்துக்கணிப்பின் நடைமுறைகளுக்கு வாஷிங்டன் ஸ்டேட் இன்ஸ்டிட்யூஷனல் ரீவ்யூ போர்டு ஒப்புதல் அளித்திருக்கிறது. இந்த நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்று நீங்கள் எண்ணினால் 1-800-583-8488 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் பெயரைத் தெரிவிக்க வேண்டியதில்லை. அனைத்து செய்தித் தகவல்களும் திரும்ப வழங்கப்பட்டுவிடும்.

**2002 ஆம் ஆண்டிலிருந்தே மாணவர்கள் ஆரோக்கியமான இளைஞர்கள் கருத்துக்கணிப்பில் பங்கேற்று வருகிறார்கள். பங்கு பெறும் மாணவர்களின் எண்ணிக்கை வருடத்திற்கு ஒரு சில ஆயிரங்கள் என்பதில் தொடங்கி தற்போது 230,000 -கும் மேலாக அதிகரித்துள்ளது!**

---

இந்த தகவலை திறனாய்வு செய்ததற்கு மற்றும் உங்கள் மாணவருடன் பேசியதற்கு உங்களுக்கு நன்றி!

இந்த ஆரோக்கியமான இளைஞர்கள் கருத்துக்கணிப்பு பின்வரும் மாநில முகமைகளால் ஆதரிக்கப்படுகிறது: Health Care Authority - Division of Behavioral Health and Recovery, Department of Health, Office of the Superintendent of Public Instruction, and Liquor and Cannabis Board. (*ஹெல்த் கேர் அத்தாரிட்டி – டிவிசன் ஆஃப் பிஹேவியோரல் ஹெல்த் அண்ட் ரெக்கவரி, டிப்பார்ட்மெண்ட் ஆஃப் ஹெல்த், ஆபீஸ் ஆஃப் தி சூப்பிரண்டெண்டெண்ட் ஆஃப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன்., மற்றும் லிக்கர் அண்ட் கேனபிஸ் போர்ட்.*)